# சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வு

**உயர்நீதிமன்ற நீதிபதி கருத்து**

பெங்களூரு, பிப். 17: சுற்றுச்சூழல் பாதுகாப்பது, மரங்கள் வளர்ப்பது குறித்து மாணவர்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதி சித்தப்பகனில்தத்யாதவ் தெரிவித்தார்.

பெங்களூரு சி.எம்.ஆர். பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல் ஆய்வு மையத்தை திறந்து வைத்த நீதிபதி சித்தப்பகனில்தத் யாதவ் மாணவர்களை ஊக்கப்படுத்தி பேசியதாவது:

“போபால் எரிவாயு கசிவு ஏற்பட்ட பின்னர் சுற்றுச்சூழலை பாதுகாக்க வலுவான சட்டம் கொண்டு வரப்பட்டது. தற்போது சாலை விரிவாக்கம் உட்பட பணிகளுக்காக மரங்கள் வெட்டப்பட்டு வருகிறது.

இதில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் சுற்றுச்சூழல் பாதுகாப்பது, மரங்கள் வளர்ப்பது தொடர்பாக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகவுள்ளது. இந்த பணிகளை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மேற்கொள்ள வேண்டும். அதேபோல் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் நீதிமன்றத்துக்கும் பங்களிப்புள்ளது. இதற்கான நடவடிக்கைகளை நீதிமன்றம் எடுத்து வருகிறது.

மாணவர்கள் படிக்கும் வயதிலேயே மரங்கள் வளர்க்க வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அப்படி முடிவு எடுக்கும்போது படித்து பெரிய பதவிகளுக்கு சென்றாலும் மரங்கள் வளர்ப்பதில் கவனம் செலுத்த முடியும்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் இயற்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் மரங்கள் வெட்டப்பட்ட போது சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் பல்வேறு எதிர்ப்புகள் தெரிவித்தனர்.

இதனால் மரங்கள் வெட்டப்படுவது குறைந்துள்ளது. மரங்கள் வெட்டப்படுவதால் சுற்றுச்சூழலுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகிறது. இதனால் மரங்களை பாதுகாத்து சுற்றுச்சூழலுக்கு புத்துணர்வு வழங்க மாணவர்கள் முன்வர வேண்டும்" என்றார்.